Registered at the G. P. O. AS A NEWSPAPER

# சன்மார்க்கபோதினி

பத்திர விலைவிகிதம்.
வருஷத்துக்குரூபா உ-0-0.
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ரு0
இந்தியாவுக்கு சதம் ரு0
பிறதேசங்களுக்கு ரு0

# SANMARKA POTHINI

விளம்பர விலை விகிதம்
வரி ஒன்றுக்குச்சதம் க0
க0 க்குமேலொருவரிக்கு
ரு0 க்குமேல்............
இனைப்பிரசுரமொவ்வொ
ன்றிற்கும் 3-ல்ஒன்று

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்.

VOL. XXXVI. JAFFNA NOVEMBER 30 th No. 21

கூசும் புத்தகம். யாழ்ப்பாணம் கக௨0 ம் வரு கார்த்திகை மீ ௩0௳ செவ்வாய்க்கிழமை. சங்கியை உக



LIBRARY 30-1995 UNIVERSITY OF JAFFNA


## விளம்பரம்.

பத்தமேனிக்குடி ஞானமூர்த்தி பொன்னம்பலமும் பெண். இராசம்மாவுமாகிய நாங்கள் இத்தாற்சகலருக்குந் தெரிவிப்பதாவது:—எங்களில் இரண்டாம் பேர்வழிகாரியாகிய இராசம்மாவின்தாயார் காலஞ்சென்ற இராமலிங்கம் பெண் சின்னத்தங்கம்பேரில் கொத்தாரிஸ் கனகராயர் மாப்பாணர் முகதாவில் 3540-ம் இலக்கத்தில் முடிந்த சீதனஉறுதி எங்களிடமிருந்து காணமற்போ யிருக்கிறது. அதிற் குறித்த காணிகளில் பத்தமேனியிறை மாவிபோடை என்னுங் காணியில் நிலப்பரப்பு மூன்றரை லை ச்சங்கள் யாதொரு ஒற்றிசுடு அறுதி நன்கொடை முதலிய எச்சாதனங்களுஞ்செய்திருக்கவில்லை. இனிமேல் அவ்வுறுதிவைத்திருப்பவர் அத்தைக்கொண்டு எவ்விதமானபாடானசாதனங்களும் பிறப்பிக்கக்கூடாதென்றும் கொத்தாரிஸ்மாரும் எழுதக்கூடாதென்றும் அறிவிக்கிறோம். இங்ஙனம்;

பத்தமேனியில் 1920-ம்ஆண்டு கார்த்திகைமாசம் 17-ந் திகதி.

ஞா. பொன்னம்பலம்
பெ. இராசம்மா.

## யாழ்ப்பாணம்.

ஊர்ச்சேர்—இருகிழமைக்குமேலே அடைத்திருந்தமழை இன்றுவெளித்திருக்கிறது. வெள்ளத்தாலும் இடையில் கச்சான்காற்று வீசினமையாலும் பயிர்களுக்குநட்டம் அதிகரிக்குமென்றே நம்பவேண்டியிருக்கிறது. சுகக்குறைவுமுண்டாகக்கூடும்.

### அடைமழையும்பெருவெள்ளமும்.

இரண்டு வாரங்களுக்குமேலே மழை இடைவிடாமல் பெய்துகொண்டு நின்றமையாலும் இடையில் கச்சான்காற்று வீசினமையாலும் எங்கும் கஷ்டமுண்டாயிருக்கிறது. தெருக்கள் வீடுகள் வளவுகள் வயல்களெல்லாம்வெள்ளக்காடாயின. எரிக்க விறகும்இருக்கஇடமுமற்றுத்தவித்தாரனேகர். நிலம்ஊறிப் படுக்கஇருக்க முடியாமல் அவதிப்பட்டாரனேகர். அரிசி கறி வாங்க முடியாமல் தொல்லைப்பட்டாரனேகர். நெற்பயிர்கள் வெள்ளத்தாளழுந்தி குருத்து க்நக்கியும் அழுகியும் கடலில் உப்புத்தண்ணீர்பெருகியும்சிலஇடங்களில்மோசம்போயின. இவ்வருடம் பஞ்சநிமித்தம் கண்விழித்து கம்மூரவர் இப்பஞ்ச காலத்தில் அனேக பொருட்களைச் செலவிட்டு அனேக புது இடங்களையும் விதைத்திருந்தனர். அதனுல் மற்றவருடம் தானியப்பஞ்சம் நீங்குமென்று காத்திருந்தோம். அதற்கு இவ்விடையூறு நேர்ந்திருக்கிறது. மிருசுவில் வயல் வெளியில் பயிர்களுக்குமேல் மிகு உயரத்தில் வெள்ளம் ஏறிவிட்டமையால் கக்கினகுருத்துகள் கரையில் வைக்கோறகந்துபோல வந்தடைந்திருக்கிறதாம். அதறகயலில் போடப்பட்ட றெயில்தெருவை மூடி இஞ்சின் வண்டிக்குள்ளே வெள்ளம் புகுதக்கூடிய அளவாய் வெள்ளம் நின்றமையால வண்டி தரிக்கவேண்டியதாயிற்று. பின்பு வெள்ளத்தை அளவுசெய்து இஞ்சின்வண்டியைக்கழற்றிக் கொடிகாமம்வரையில் ஆட்கள் தள்ளிக்கொண்டுபோய்ப்பார்த்து இஞ்சினுக்குள் வெள்ளம் புகாதென்று கண்டபின்னரே மறுபடி கொண்டுவந்து தொடுத்து மெதுமெதுவாய் வண்டியை விட்டார்களாம். இப்படியே பல இடங்களில் வெள்ளத்தால் பாதை அள்ளுண்டமையால் பிரயாணிகளுக்கும் மிகு சங்கடமுண்டாகும்படி றெயில் தாமதப்பட்டே வருகிறது.

### கான்களை ஊரவர் வெட்டவேண்டுமாம்.

தற்போது காணியுடையவர்கள் அவரவர் காணிகளுக்கு முன்னிருக்குங் கான்களிலுள்ள பற்றைகளை வெட்டித்துப்புரவு செய்யவேண்டுமென்று இப்பகுதியிற்கட்டளை பிறந்திருக்கிறது. வரவாஎல்லாம் விநோத உத்தரவாயேஇருக்கிறது. இது எங்கிருந்து எச்சட்டப்படி வந்த உத்தரவென்று நமக்கு விளங்கவில்லை. விளங்கா விட்டாலும் கோட்டார் குற்றம் போட்டேவிடுவார்கள். அப்பால் அப்பீல் கேட்டாற்றான் நீதி கிடைக்கிற்கிடைக்கும். பகிரங்க வேலைப்பகுதியென்றும். றோட் கொம்மிற்றி யென்றும் இருபகுதி என்னத்திற்காகஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோதெரியவில்லை. அதில் மிச்சம்பிடித்து வாரிக்கொட்டவினைத்தவரின் எடுப்பிதென்றேஎண்ணுகிறோம். ஒருவனுக்குப்பலஇடங்களிலும் பிரயோசனமற்ற பலகாணிகளுண்டு. அவைகளெல்லாவற்றின் அருகிலுள்ளகான்களையும் இப்பஞ்சகாலத்தில் அப்புரவு செய்வதென்றால் லகுவானகாரியமா கூலியாள் அகப்படுமா? கானில்நிற்கும் பட்டமரத்தையாவது அயற்காணிக்காரர் வெட்டவிடுவார்களா? அதற்கில்லாவுரித்து இதற்குவரல் நியாயமா? தெருவைப் பழுது பார்ப்பதும் அவரவரென்று விட்டுவிட்டால் பணம் அதிகமாய் மிஞ்சமே! "சொல்வார்க்கொருசொல் சுமப்பார்க்கு ஒரு அடியும் போகாது" என்றே இவ்விஷயத்தில் நாம் சொல்லவேண்டியிருக்கிறது. இதன் விஷயமாய்ப் பகிரங்கவேலைப்பகுதியார் மீண்டும் புனராலோசனை செய்வாரென நம்புகிறோம்.

### வண. உவில்லியம் ஓஎன். சுவாமியாரின் தேகவியோகம்.

யாழ்ப்பாண ஆசனக்கோயிற் கட்டளைக்குருவாயிருந்துவந்த வண. உவில்லியம் ஓஎன் சுவாமியார் சென்ற 16-ந்திகதி செவ்வாய்க்கிழமை சாயங்காலம் 5 மணிபோலக் காலஞ்சென்றார். இவர் ஓர் உத்தம தயாளகுணமுள்ள சற்குரு. இவர் இங்கிலாந்திலே யோர்க்ஷயர் மாகாணத்திலுள்ள லீட்ஸ் நகரிலே 1862-ம் ஆண்டு ஆடி மாசம் 23-ந்திகதி பிறந்தவர்.

1880-ம்ஆண்டு ஐப்பசி மாசம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இவர் வலிகாம மேற்கிலும், பரித்தித்துறையிலும், திரிகோணமலையிலும், நெல்லிப்பழையிலும், மன்னார் மாதோட்டத்திலும், ஊர்காவற் றுறையிலும், கடைசியாக ஆசனக்கோயிலிலும் கட்டளைக்குருவாயிருந்து கிறீஸ்துவர்களின் ஞானநன்மைகளையுந் தேவைகளையும் மிக்க கவலையோடு விசாரித்து வந்தவர்.

மாதோட்டம் முதலிய இடங்களிலே திருத்தொண்டு புரிந்த காலங்களிலே இரவென்றும், பகலென்றும், கூதலென்றும், வெயிலென்றும் மழையென்றும், பனியென்றும் பாராது கடின பிரயாசப்பட்டு வந்ததினுல் தேகத்திலே நோய் குடிகொள்ளலாயிற்றும். இவர்க்காய்த் துயருறுமனைவருடனும் நம்மனுதாபமுமிருக்கிறது.

சரமகவி—"யாழ்ப்பாணம் மானிப்பாய் மகா ஸ்ரீமாந் சரவணமுத்து அவர்கள் குமாரர் சுபபிரமணியபிள்ளை அவர்களின் செல்வப்புத்திரியும், மகா ஸ்ரீமாந் கனகரத்தினம்பிள்ளை சுவாமிநாதபிள்ளை அவர்களின் தருமபத்தினியும் ஆகிய ஸ்ரீமதி அன்னலட்சுமிப்பிள்ளையின் தேகவியோகத்தைக்குறித்து சுதுமலை ஸ்ரீமத் ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் அவர்கள் சொல்லிய சரமகவி" ப் பிரதியொன்று பெற்றோம். இது நாவலர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. அவ்வுத்தமியின்குணநியங்களுக்கு இக்கவிகள் போதியதல்லவென்பது நமது துணிபு. அனுப்பியபிரதிக்காய் வந்தனங் கூறுகிறோம்.

### பிரலாப கவிதை.

மானிப்பாய் ஸ்ரீ. கமசிவாயமவர்களின் புத்திரர் ஸ்ரீ. துரையையா அவர்களின் தேகவியோகமும் மிக மனவருத்தத்துக்குரியது. அவர்க்காயும் ஓர் பிரலாபகவிதை இவ்வியந்திரசாலையில் அச்சிட்டு வெளிப்படுகிறது.

ஏழைகட்கு உதவி—வெள்ளப்பெருக்காலே தங்க வீடின்றி உறங்க இடமின்றி உண்ண உணவின்றி கஷ்டப்படும் ஏழைகளுக்கு இரங்கி கொட்டடியிலே வசிக்கின்ற குத்தகைகாரன் மெஸ். கிருஷ்ணபிள்ளை கதிரேசபிள்ளை சென்ற 22-ந் திகதி திங்கட்கிழமை 40 மூட்டை அரிசியும் தேங்காய்களும் ஏழைகளுக்குக் கொடுத்தாராம். தருமமே ஜெயம்.

யாழ்ப்பாண லோக்கல்போட்டு எல்லைக்குட்பட்டோர் வருஷத்திலே கொடுக்கும் வரிவிகிதமாவது—

| | | |
|---|---|---|
| அப்பக்கடைக்கு | ... ரூபா | 6 |
| சோற்றுக்கடைக்கு | ... | 3 |
| மாட்டுப்பட்டி (3 பசுமாடு அல்லது அதற்கு உட்பட்ட தொகைக்கு | ... | 3 |
| மாட்டுப்பட்டி (3 பசுமாடுகளுக்குமேலேயாருல் சோடா முதலிய பானவகைகள் வைத்து வியாபாரஞ்செய்வாருக்கு | | 25 |

சுற்றுட்டத் துரைமார்—சனக்கணக்கெடுக்கும் தலைவராகிய மெஸ். ரேணர்த்துரை சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்து ஆங்காங்கு பலவிடங்களையும் சுற்றிச் சனக்கணக்கெடுக்கும் வகையையும் விபரங்களையும் அது எடுக்கவைக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்குச் சொல்லிக்கொடுத்து திரும்பினர்.

பொலிஸ்தலைவர்—டிப்பியூற்றிப் பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறலாகிய மெஸ். அற்றிக்கலை யாழ்ப்பாணம் வந்து பொலிசுப்பட்டாளங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு போகின்றார்.

தமிழ்ப்பிரதிநிதி—சட்ட நிருபண சபையிலே இரண்டாம் தமிழ்ப் பிரதிநிதியாய் இருந்துவந்த கௌரவ சபாபதி தேகாரோக்கியக் குறைவாலே சிலகாலம் விலகியிருந்து மறுபடி சுகம் பெற்றமையால் மறுபடியும் தம் பணிவிடை பார்க்க முன் வந்திருக்கிறார்.

## இலங்கை.

புதுவரி—புதிய முறையான சட்டநிருபணசபை தொடங்கும்போது அதிலே வருமான வரியென ஒரு புதுவரி வைப்பதையும் தலைவரியென்றுள்ள பழைய வரியை நீக்கிவிடவும் ஆலோசனைசெய்யப்படுமாம்.

பெருவிருந்து—கொழும்பிலே சிவிலுத்தியோகஸ்தர்களாலே சென்ற 13-ம் திகதி இரவு மெஸ். டெனும்துரைக்குப் பெருவிருந்திடப்பட்டது. கொலோனியல் சக்கிடுத்தார் பங்கியின் தலைவராய் அமர்ந்த டெனும்துரையை வாழ்த்திப்பேசினர். வேறு சிலரும் அவ்வாறு பேசினர்கள்.

மெஸ். சிமித்துரை—இவர் சென்ற 17ந் திகதி துவக்கமாக உணவுப்பொருட் செய்கைத்தலைவர் உத்தியோகத்தைக் கையேற்றார்.

தேசாதிபதியின் விவாகம்—மிஸ். செவ்றன் யொன்ஸ் என்பவர்தேசாதிபதியின் மனைவியாராக நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறார். இவர் வருகிற மார்கழிமாசம் 2-ந் திகதி பம்பாய்நகரிலே இறங்கி இந்திய றெயில் மார்க்கமாக கொழும்புவந்துசேருவர். விவாகச்சடங்கு அமைதியாக நடக்கும். அதற்கான மாசமும் திகதியும் இடங்களும் பின்னுலே குறிக்கப்படும்.

இவர் பலபாஷை படித்தவர். யுத்தம் நடந்தபோது லண்டன் வைத்திய சாலையிலே யுத்தசேவைச் சக்கிடுத்தார்வேலை பார்த்துவந்தவர். பின்னர் பெண்களின் யுத்த சேவைக் கூட்டத்துக்கும் சக்கிடுத்தாராயுமிருந்தவராம்.


கையொப்பவரவு

மானிப்பாய்.
ஆ. சின்னத்தம்பி 2—50


### நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தர்ப்பலமாயும், ரோகம் முதிர்த்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலஹீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண் பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணுகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலஹீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஷீர்ரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும். (டோண்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாயிருக்கவேண்டுமானுல் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.




ஒரு புட்டி விலை, ரூபா. .... 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. .... 10 8 0

இவை, சிமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட், ஆடப்பிலியு. ஏச். நல்லர் துரையவர்களிடத்திலும் கிடைக்கும்.

சிரேஷ்ட நீதியாசர்—இலங்கைச் சிரேஷ்ட நீதியாசரா யிருந்துவருகின்ற சேர் அன்ரும் பேட்றம் இராசா காஹன்தேசத்திலுள்ள பெரிய அதிகாரியான கொம்மிஷனருக்குத் துணைச்செய்வதற்காக நியமிக்கப்பட்டு அங்கு போகவிருக்கின்றார். மூன்றுமாசங்களாலேமறுபடிதிரும்புவாராம்.

செவிடர் குருடர் சாலை—மவுண்லவினியாவிலே செவிடர், குருடர், ஊமர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள சாலையிலே இவர்களின் தொகை முப்பதுபேரிலிருந்து நூறுகிவிட்டது. இவர்களின் நெருக்கத்தை நீக்குவதற்குப் புதிய கட்டிடங்கள் கட்டவேண்டியிருக்கிறது. இதற்காக அரசாட்சியார் பதினாயாயிரம் ரூபா கொடுக்கவிருக்கிறார்கள்.

உபாத்திமாருக்குப் பென்சன் — இலங்கையிலே அரசாட்சியாரின் உதவிப்பணம் பெற்று நடைபெறுகின்ற கலாசாலைகளின் உபாத்தியாயர்களுக்கு பென்சன் பணம் கொடுத்துவருவதைப்பற்றியும் அது கொடுத்துவருவதற்கான ஒரு முதல் கட்டுவதைப்பற்றியும் ஆலோசனை செய்து றிப்போட்டுப்பண்ணும்படி தேசாதிபதி ஒரு கொம்மிற்றியை நியமித்திருக்கிறார். அக்கொம்மிற்றிக்குத் தலைவர் வித்தியாகர்த்தரான மெஸ். ஈ, இவான்ஸ்துரை.

தேயிலைத்தோட்டமும் கூலிச்சனங்களும்—இலங்கைத் தேயிலைவிற்குந் விலை குறைந்தமையால் தோட்டக்காருக்கு கட்டும் அரசாட்சியாருக்கு வரும்படியுங்குறைந்தது. இதனுல் இந்திய கூலிச்சனங்களில் சிலரைநீக்கிவிடத் திர்மானித்துவிட்டார்கள். அவர்கள் இந்தியாவுக்குப் போகும்வரையில அரசாட்சியார் அவர்களுக்கு வேலைகொடுப்பார்களாம். இலங்கையில் பிறந்த கூலிகளை நிலையான வேலைகொடுத்துத் தாபரிப்பார்களாம்.

மலையிடிவு—அவகமாவுக்கும் கடிக்கலாவுக்குமிடையே மலையிடிந்துவிழுந்து றெயில்பாதையை மூடினமையினலே றெயில்போக்குவரவு தாமதப்பட்டுத் தடைநீக்கப்பட்டது.

பிண்ணுக்கு ஏற்றுமதி—கொளும்பிலிருந்து பம்பாய்க்கு ஏற்றும் பிண்ணுக்குக்குக் கப்பற்கேள்வு தொன் ஒன்றுக்கு இருபத்தைந்துரூபாய், இப்போது அது 15 ரூபாய் 28 சதமாகக் குறைக்கப்பட்டது.

கேம்பிறிட்ச் சருவகலாசாலைப்பரீட்சை—இது இத்தேசத்துக்கு வந்த காலந்தொடக்கம் அதற்குப் போகும் மாணுக்கரின் தொகை வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. இவ்வருடம் இச்சோதனைக்குப்போனேர் ஏறக்குறைய இரண்டாயிரம்பேர்.

தெரிவுக்கு றெஜிஸ்தர்பண்ணப்பட்டோர்—மேல்மாகாணத்திலே சட்டநிருபணசபைப் பிரதிநிதிகளைத் தெரியும் உரிமையுள்ளவராய்றெஜிஸ்தர்பண்ணப்பட்ட பன்னீராயிரம்பேருள் பதினுயிரம்பேர் இலங்கைச் சனசங்கத்தாராலே ஏவப்பட்டு றெஜிஸ்தர்பண்ணுவிக்கப் பட்டவர்களாம். கொளும்புப்பகுதியிலே றெஜிஸ்தர்பண்ணப்பட்ட 4,200 பேரில் மூவாயிரம்பேர் சனசங்கத்தாரால் றெஜிஸ்தர்பண்ணப்பட்டார்களாம். சங்கத்தார் தம் எண்ணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்விக்கத்தக்கவர்களா யிருக்கிறார்களென்பது இதனுல் விளங்குகின்றது.

தற்கொலையிருந்த மாகாணம்—தென்மாகாணமே கொலைக்கு முதன்மையானதாய்க் காணப்படுகின்றது. சென்ற வருடத்தில் அந்த மாகாணத்தில் நடந்த தற்கொலைகள் 70 ஆம்.

மட்டுக்களப்பு நெல்—இப்போது அனுசரிக்கப்படும் கட்டுப்பாட்டைநீக்கி மட்டுக்களப்பு நெல்லை மற்றப்பகுதிகளுக்கு ஏற்ற உத்தரவு கொடுக்கலாமோவென்று ஆராய்வுசெய்யும்படி அரசாட்சியார் நியமித்திருந்த கூட்டத்தவர்கள் மட்டுக்களப்புக்குச்சென்று அரசாட்சி ஏசண்டரையும் விசேஷ கமக்காரர், மற்றும் வர்த்தகப் பிரபுக்களாதியரையும் ஒருங்குகூட்டி யோசித்து இப்போது அனுசரிக்கப்படும் ஒழுங்கை மாற்றப்படாதென்னுந் தீர்மானஞ் செய்யப்பட்டதாம்.

கள்ளநாணயங் கண்டுபிடித்தல்—ரூகமவைச்சேர்ந்த இருவர் கொளும்பு மதிராஸ் வங்கிக்குக் கள்ளக்கடதாசி நோட்டுகளை மாற்றும்படி கொண்டுபோனபோது கண்டுபிடிக்கப்பட்டனராம். அவர்கள் கொண்டுபோனது ஒன்பது 100 ரூபாய் நோட்டுகளும், மறு சில்லறை நோட்டுகளுமாய் 1000 ரூபாய். இவற்றுள் 100 ரூபாய் நோட்டுகள் ஒன்பதுங் கள்ளநோட்டுகளாகக் காணப்பட்டன.

## இந்தியா.

மண்டபத்தில் பொலிஸ் ஸ்றேசன்—மண்டபத்திலே சென்னை அரசு ஒரு பொலிஸ் ஸ்றேசனை ஸ்தாபித்திருக்கின்றது.

## ஐயர்லந்து.

இவ்விடத்தில் சின்பீனர் பொலிசரையும் உத்தியோகஸ்தரையும் தாக்கிக்கொல்வதால்ஐயர்லாந்தர் பழிவாங்கப்படுகின்றனர். வைக்கோரப்போர் மாட்டுக்கொட்டில் விவசாயிகளின் வீடுமுதலியன தீயிடப்பட்டது.

இங்கிலாந்திலுள்ளதொழிற்கட்சியார் அயர்லந்து விஷயமாய் எவ்வித முடிவுசெய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையை அயர்லாந்திலுள்ள எல்லாத் தொழிலாளர்களும் டப்ளின் நகரில் கூட்டம்கூடி அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். அயர்லாந்தில சிறுபான்மையோரான சனத்தொகையினரைக் காக்கும்பொருட்டும் அயர்லந்தில் தனியாக ராணுவப்படையும் கடற்படையும் ஏற்படாவண்ணம் தடுக்கும்படிக்கும் அயர்லாந்தின் அரசியல் அமைப்பிலேயே சிற்சில பாதுகாப்புகளை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லிருப்பது அனுவசியமென்று தோன்றுகிறதென்றும் அறிக்கையில் காணப்பட்டிருக்கிறது. அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்படக்கூடிய உடன்படிக்கையின் அம்சங்களாகவே அவைகள் இருக்கவேண்டும். பிரித்தானிய அரசாட்சியார் அயர்லாந்தில் நடத்திவரும் காரியங்களைப்பற்றியும் அவர்களது கொள்கைகளைப்பற்றி விசாரித்து வருவதாக தொழிற்கட்சியார் ஒரு கமிஷனை அயர்லாந்துக்கு அனுப்புகிறார்கள்.

காலஞ்சென்ற மாக்ஸ்வின்னியைத் தண்டனைக்குட்படுத்திய ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவரையும் வேறுமூன்று ராணுவ உத்தியோகஸ்தரையும் புகைரதத்தில் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும்போதே கார்க்கு நகருக்குச்சமீபத்தில் சில சின்பீன்கூட்டத்தார் எங்கேயோ தூக்கிக்கொண்டுபோய்விட்டார்களாம்

17-ந் திகதியன்று கார்க்நகரில் இன்னொரு பொலிஸ்காரன் சுட்டுக்கொல்லப்பட்டான்.

கௌண்டி கிளேர் என்றவிடத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அதில் 4 பேர்கள் தப்பியோட ஆரம்பித்தபோது சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் பிரங்கிப்பிரயோகிகளில் இரண்டு பேர்கள் ஐப்பசிமாதம் 28-திகதி முதல் காணும்போயிருப்பதாகவும் உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

"நேஷன் லிபரல் கிளப்" என்றசங்கத்தில் மெஸ். ஆஸ்குவித் பேசகையில் அயர்லாந்தில் பழிக்குப்பழிவாங்கும்முறையை அரசாட்சியார் அனுஷ்டித்து வருவதானது கண்டனத்திற்குரியதென்று சொல்லிவிட்டு பின்வருமாறு குறிப்பிட்டார்:—அயர்லாந்திலுள்ள ஸோல்சர்களும் பொலிசாரும் தப்பான எண்ணத்தில் மேலேயே அங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று அவர்கள் எண்ணுமல் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கவே ஏசண்டுகளாக நியமிக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள் போலும். கடந்த 6 மாதகாலத்தில் அயர்லாந்துமுழுமையுமே பிரசாயுத்தம் நடைபெற்றுவருகிறது. நியாயம் வழங்கவேண்டிய இடத்தில் குருட்டெண்ணங்கொண்டு இரக்கமில்லாததும் யோசனையில்லாததுமான பழிக்குப்பழிவாங்கும் முறையை அரசாட்சியார் கையாடத்தலைப்பட்டுவிட்டனர். இப்பொழுதுள்ள நிலைமையிருத்திக்கு வந்திருக்கிறதென்று சமீபத்தில் அதிகாரிகள் சொல்லியதெல்லாம் பொய்யென்றே தோன்றுகிறது. மீண்டும் அக்கிரமங்கள் நடைபெற்றுவருகிறதாகவே தோன்றுகிறது. உத்தியோகஸ்தர்களின் வார்த்தைகளையெல்லாம் நம்பக்கூடவில்லை அயர்லாந்திலுள்ள பொலிசாரும் ஸோல்சர்களும் வேண்டுமென்றே படுகொலைசெய்துவருகிறார்கள். படுகொலைகளெல்லாம் அதிகாரிகளின் உத்தரவின்மேலேயே நடைபெறுகின்றன. நிர்வாக அதிகாரிகளின் புத்திப்போக்கானது ஐரோப்பாவிலுள்ள எந்தத் தேசத்தில் மிகவும் கேவலமான யதேச்சாதிபத்யம் நடைபெற்றுவருகிறதோ அதைவிடக்கேவலமாகவே இருக்கிறது. பிரித்தானிய மகாசனங்களின் பெயரால் எவ்வளவு கௌரவக்குறைவான காரியங்கள் நடைபெற்று வருகின்றனவென்று மகாசனங்கள் அனைவருக்கும் எடுத்துரைக்கப்போகிறேன். ராசியப் பிரசாரஞ்செய்யும்போது சான்பிஸைட்டின் வாக்கியமாகிய "நியாயமாய் நடந்துகொள், ஒருவருக்கும் பயப்படாதே" என்ற முதுமொழியையே அனைவரும் பின்பற்றி நடக்கவேண்டும்

### பார்லிமெந்துப் பிரதிநிதிக்கு தண்டனை.

பார்லிமெந்துப் பிரதிநிதிகளான மெஸ. மீலோன் என்பவர் ராசத்துரோகமான வார்த்தைகளை அல்பர்ட் ஹாலில் பேசியபோது உபயோகித்ததாகக் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்ட வழக்கில் ஒரு குற்றத்திற்கு 6 மாத கடுங்காவல் அவருக்கு விதிக்கப்பட்டதாகவும், இன்னொரு குற்றத்திற்கு அவர் 4000 பவுணுகருப் பிணைகொடுக்கவேண்டுமென்றும் இல்லாவிட்டால் 6 மாதம் காவல் தண்டனையென்றும் தண்டனைவிதிக்கப்பட்டதாக ஒரு தந்தி கூறுகின்றது. அவர் அப்பீல் செய்யப்போகிறதாகவும் தெரிகிறது.

மெஸ' மீலோனை விசாரணை செய்தபோது வழக்காளிப்பக்க நியாயதுரந்தரர் இல் வாதிக்கையில் அவரது வீட்டில் லைசென்சில்லாமல் இரண்டு கைத்துப்பாக்கிகளும் கொஞ்சம் வெடிமருந்துகளும் கிடந்ததாகவும் உலகம் முழுமையுமே சண்டை ஏற்படப்போவதால் "போல்ஷெவிக்கர்களின் படைக்குத் துணையாகவிருங்கள்" என்று மருட்டியிட்டும் உலகம்முழுதும் நம்வசம் வரும்வரையில் நாம்மது ஆயுதங்களை கீழேவைக்கமாட்டோம் ராணுவத்தை முழுமையும் ராசத்துரோகிகளாய் மாற்றிவிடுவோம் இப்பொழுது அரைவாசிப்பேர்கள் நம்பக்கம் வந்துவிட்டார்கள்" என்று மருட்டியிட்டும் இரண்டு துண்டுப்பிரசுரங்கள் காணப்பட்டதாகவும் சொன்னர். எதிர்பக்க நியாயதுரந்தரர் இதை ஆட்சேபித்துப்பேசினாராம்.

### கிறிமியாவில் யுத்தம்.

கிறிமியாவில் ஜெனரல் ராங்கலின் சேனைகள் தங்குவதற்குக் கொஞ்சம் கூட போல்ஷெவிக்கர்கள் இடங் கொடுக்கவில்லை யென்றும் கிறிமியா முழுமையும் காலிசெய்து விட வேண்டு மென்றுதீர்மானிக்கப்பட்டு விட்டதாகவும் கொன்ஸ்தாந்தி நோபிளிலிருந்து வந்த தந்தியொன்று கூறுகின்றது. போல்ஷெவிக்கர்கள் விஷக்காற்றை உபயோகித்து வருகிறார்கள் 30000 பேர்கள் கொல்லப்பட்டு விட்டதாக அவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். கிறிமியாவில் சகாயத்திற்கென்று சென்றிருந்த கூட்டத்தார் கொன்ஸ்தாந்திநோபிளுக்குத் திரும்பிவந்துவிட்டனர்.

கருங்கடலிலுள்ள பிரித்தானிய கடற்படையானது அங்கு நடுவுநிலைமை வகிக்கும்படிக்கு உத்திரவிடப்பட்டிருப்பதாகவும் பொலிசார் செய்யக்கூடிய வேலைகளையே அப்படை செய்து வருவதாகவும், கடற்படைப் பகுதி அறிக்கையொன்று கூறுகிறது.

செபஸ்ரோபூல் என்றவிடத்தை போல்ஷெவிக்கர்கள் பிடித்துவிட்டார்கள் என்று சொல்லிய சமாசாரமானது லிபாஸ்போலை பிடித்துவிட்டதாக டெலிபோனில் காதில்விழுந்ததாகவும் ஆகையால் சிபாஸ்ட்போல் பிடிபட்டது என்றசெய்தி தவறுதல் என்றும் இப்பொழுது மறுக்கப்படுகிறது.

அமெரிக்காவின் கடற்படை அதிகாரியின் சிபார்சின்மேல் கருங்கடலிலுள்ள அமரிக்க கப்பல்கள்கிறிமியாவைவிட்டுப்போகும். அடைக்கலம்புகுவோர்களுக்கு உதவிபுரியவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

## ருசியா.

ஜெனரல் ராங்கலின் நிலைமை மிகவும்நெருக்கடியாயிருக்கிறது. கிரிமியாவிலிருந்து 80000 பேர்கள் ஓடி வந்து எங்கேயாவது வெளியே ஓடிப்போவதற்காக அனுமதிகேட்டனர். ஆனல் வெளியே அனுப்ப அதிக வசதியில்லை. 20000 பேர்களுக்கு அதிகமானவர்களை வெளியே அனுப்பமுடியாது. 13உ பிற்பகலில் தான் முதலாவது அடைக்கலக் கூட்டத்தார் இங்கு வந்து சேர்ந்தனர். ஆகாரமும் வீட்டு வசதியும் இல்லாததால், அவர்கள் இறங்கவிடாமல் தடுக்கப்பட்டனர். அவர்கள் நிலைமை வெகு பரிதாபமாக இருக்கிறது. பிரான்ஸ் தேசமே முன் வந்து, அல்சீரியர்களும் அடைக்கலம் புக இடம் கொடுப்பார்களென்று தெரிகிறது. கிரிமியாவில் போல்ஷெவிக்கர்கள், ஏராளமான பிரதேசங்களில் முன்னேறிவருவதாகவும், சத்துருக்கள் சின்னபின்னமாய்ப்பின் வாங்கிக்கொண்டு வருவதாகவும், ராணுவப் பண்டசாலைகளையும், ஆகாரதிகளையும் கொளுத்திக் கொண்டே செல்வதாகவும், போல்ஷெவிக்கத் துருப்புகள் ராணுவத்தளவாடங்களைப் பிடித்துக்கொண்டதாகவும் தந்தி கூறுகின்றது. போல்ஷெவிக்கர்கள் ஜெனரல் ராங்கலின் படையைத் துண்டாடிவிட்டபடியால் கிரிமியாவின் நிலைமை நெருக்கடியாயிருப்பதோடு அதைக் காலி செய்துவிடுவதும் கஷ்டமாயிருக்குமென்று தெரிய வருகிறது.

ஜெனரல் ராங்கலின் கட்சியைச் சேர்ந்தவர் மென்டின் பிரதம மந்திரி மெஸ் கிரோவிசின் ஸ்திரீகளையும், குழந்தைகளையும் கிரிமியாவை விட்டு அப்புறப்படுத்த ஏற்பாடு செய்து வருகிறார் கிரிமியா முழுமையும் காலி செய்யப் பிரயத்தனம் நடை பெற்று வருகிறது. போலந்துடன் சமாதானம் ஏற்பட்டு விட்டபடியால் போல்ஷெவிக்கர்கள், தெற்கு ருஷ்யா முழுமையும் மிக்க பலத்துடன் தாக்க வசதி ஏற்பட்டு விட்டது.

### போல்ஷெவிக்குகளின் கொடுமை.

பொல்ஷெவிக்குகள் அர்காஞ்சல் பாகத்தில் கொடூர செயல்களைப் புரிந்து நடுக்கத்துக்குரிய பயங்கரத்தை விளைவிக்கிறார்கள். 1200 உளவுகாரர்களை பிரங்கிகளில் வைத்து சுட்டுக்கொன்றாம். ஸ்திரிகளைச் சிறைபிடித்தும வருகின்றனராம்.

ஜெனரல் ராங்கலின் படையானது அடிபட்டுப்போய் விட்டபடியால் போல்ஷெவிக்கர்கள் உக்ரேனியர்களைத் தாக்க ஆரம்பித்து வெகு கஷ்டங்களை விளைவித்துவருகின்றனர். கிட் நகரை உக்ரேனியர்கள் காலிசெய்துவிட்டு இதர நகரங்களையும் காலிசெய்து விட்டதாகவும் போல்ஷெவிக்கர்கள் உக்ரேனியப்படைகளைப் பிளந்துகொண்டு உள்ளேசென்று விட்டதாகவும் உக்ரேனியர்களுக்குப் போதிய தளவாடங்கள் இல்லையென்றும் 18உ ஒரு தந்தி கூறுகிறது.

### பிராஞ்சிய பிரசாதிபதியின் அதிகாரம்.

பிராஞ்ச தேசத்தில் குடியரசுத் தலைவரை எழு வருஷத்துக்குத் தெரிந்தெடுக்கிறார்கள். இவர் சிவில், மிலிட்டெரி உத்தியோகங்கள் நியமிக்கவல்லமையுள்ளவர். குற்றவாளிகளை விடுதலைசெய்ய அதிகாரம் வகித்திருக்கிறார். அந்நியதேச அரசர்களுடன் எவ்வித உடன்படிக்கைகள் செய்யப்பட்டாலும் இவர்தான் கையொப்பம்வைக்கவேண்டும். பார்லிமென்டார் சம்மதியின்பேரில் வேந்தர்களுடன் சமர்தொடுக்க அதிகாரம் பெற்றவர். அவர் செய்யும் ஒவ்வொரு விஷயங்களையும் மந்திரியுடைய உபகையெழுத்துடன் நடத்தவேண்டும். ஆங்கிலேய சக்கரவர்த்திக்கிருக்கும் அதிகாரத்தைப்போல் பிராஞ்சிய பிரசாதிபதிக்கு மிருக்கிறதாகச் சொல்லலாம். ஆனல் அவரெப்போதும் சக்கரவர்த்தி. இவர் எழு வருஷத்திற்குத்தான்.

### கண்ணுடியும் மின்னலும்.

இக்காலத்தில் இடி மின்னல் உண்டாகும் நேரத்தில் கண்ணுடியை துணியால் மூடவேண்டிய பயமில்லை. முற்காலத்தில் கண்ணுடியின் பின்புறம் இரசத்தால் தடவப்பட்டிருக்கும், அதனுல் இடி மின்னல் அதைத்தாக்குமென்ற பயமிருந்தது. இக்காலத்திலோ கண்ணுடிகள் எலெக்டிரிக் குளம்பினுல் வெள்ளி கலக்கப்பட்டு தடவப்படுவதால விபத்து நேரிடாதென சொல்லப்படுகிறது.

### பெல்சிய பிரான்சிய உடன்படிக்கை.

பிற்காலங்களில் செர்மனியர் படையெடுத்து வந்து தாக்கினுல் அதைத்தடுப்பதற்காகப்பிரான்சியரும் பெல்சியருஞ்சேர்ந்து ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

கிரேக்கதேசம்—கிரேக்கதேசத்தார் பழைய அரசர் கொன்ஸ்டன்றைனையே அரசராக்கத்தீர்மானித்தார்கள். அதனுல் பழையமந்திரி மெஸ் வெனிசிலாஸ் வேலையைவிட்டு நைஸ்என்ற இடத்திற்குக்கப்பலேறிப்போய்விட்டார்.

பழையஅரசர் சிம்மாசன பதியாவதைப்பிரான்சியர் ஆட்சேபிக்கிறார்கள். அங்கிலேயரும் அப்படியேஎண்ணுகிறார்கள்.

### தண்டனை விதிக்கப்பட்டவிபரம்.

சென்ற ஆனிமாதம் 28-ம் திகதிக்குப்பிறகும் ஆடி 2-ம் திகதிகுமுன்னும் ஜலந்தரிலும் சோலோனிலும் ஆயுதமெடுக்கமறுத்த ஐரிஷ் சேனைகளில் 69 பேர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்களில் 8 பேர் குற்றமற்றவர்களென விடுதலை செய்யப்பட்டனர். மற்ற 61 பேர்களில் 15 பேரைச் சுட்டுக்கொன்றுவிடவேண்டுமென உத்தரவளிக்கப்பட்டது. கார்த்திகைமாதம் 2-ந்தேதி இரகசிய உத்தரவின்படி ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர்களின் தண்டனை ஆயுள்பரியந்தம் தீவாந்திர சிட்சையும் கடுங்காவலுமாக மாற்றப்பட்டது. 36 பேருக்கு சில குறிப்பிட்ட வருஷம் கடுங்காவல் மண்டனை விதிக்கப்பட்டது.

### இராச கன்னியஸ்திரி.

லுக்ஷம்பர்க் தேசத்தின் பெரிய பெருமாட்டியவர்கள் உலகத்தைத் துறந்து மொடேனு நகரிலுள்ள கர்மேல் மடத்தில் கன்னியாஸ்திரி பட்டம் பெற்றுக்கொண்டனர். இந்த அம்மாள் தன் அழகிய நீண்ட கூந்தலை நறுக்கிவிட்டு இராசஉடைகளைக் களைந்து கறுப்புடை தரித்து தனது இராச குடும்பத்தார் தன்னைச் சூழ்ந்துவர அர்ச். தெரசம்மாள் மடத்தில் பிரவேசித்தனள். இந்த அம்மாளுக்கு வயது 27.

### பாம்புகளின் தோட்டம்.

தென்னமரிக்காவிலுள்ள பிரசில் நாட்டின் நகரங்களிலொன்றுகிய சான்பாலோவுக்கு 10 மைல் தூலையில் பாம்புகளின் தோட்டமொன்றிருக்கிறது. அத்தோட்டத்தில் நானுவிதமான சர்ப்பங்கள் வளர்க்கப்படுகிறது. பிரசில் நாட்டில் பாம்புகள் மற்றதேசங்களைவிட அபரிமிதமாக உற்பத்தியாவதால் அப்பாம்பினங்களால் கடியுண்டு மடிந்தவர்கள் அனந்தம்பேராம். இந்தப்பாம்புகடிக்கு ஔஷதம் சேகரிக்கும்பொருட்டு மேற்படி தோட்டத்தில பாம்புகளைப் பிடித்துவந்துவிட்டு அவைகளுக்கு வீடுகள்கட்டி வைத்திருக்கிறார்கள். இவைகளினிடத்திலிருந்து உண்டாகும் ஓர்வித திணசீர் பாம்புவிஷத்தை தக்ஷணமே கண்டிக்கக்கூடிய அவுஷதமாயிருக்கிறதாம்.

### சூதன்னமாது.

பாரீஸ் பொலீசார் ஏவிலயின் லீவ் என்னும் சூதுடைய ஒருத்தி நாற்பத்திமூன்றுமுறை மணம் புரிந்ததாகச் சிறைப்படுத்தினார்கள். இக்கபடகுணமுடைய மாது தான் மணஞ்செய்துகொண்ட ஒவ்வொருமுறையும் தனக்கு அக்காலங்களில் வரும்பணம் இனும், நகை. பொருள் உடை முதலியவைகளைக்கைக்கொண்டு தான் அன்றையத்தினமே அங்குள்ள ஒருவர் கண்ணுக்குத் தெரியாது ஊரில் திரிந்து மறைந்துவந்தானம் காசுக்கு ஆசைப்பட்டவள் இன்னும் ஏதுதான்செய்யாள்.

### ஈரவெங்காயத்தின் குணம்.

விஷக்காற்றை கிரகித்துக்கொள்ள ஈரவெங்காயத்துக்குச் சக்தியுண்டு. வட இந்தியாவில் விஷபேதியாவது வைசூரியாவது தோன்றும்போது ஈரவெங்காயத்தை மாலையாகக் கோர்த்துவிட்டு முகப்பில் தொங்கவைப்பது சனங்களின் வழக்கம். இவ்வழக்கம் மிகவும் நன்மை வானதென்றும் விஷக்காற்றை ஈரவெங்காயம் கிரகித்துக் கொள்ளுகிறதென்றும் ஐரோப்பிய வைத்திய நிபுணர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

## நெற்கதிரைச்சேதம்பண்ணும்பூச்சி

இந்தப் பூச்சிதான் நெற்கதிரின் சாரத்தை உறிஞ்சி நெல்லைச் சாவிபோல் காயப்பண்ணுகிறதற்குக் காரணமென்று கமத்தொழிலாளர் நல்லாய் அறிந்திருக்கிறார்கள். இதனுல் அந்நெல்லு சாப்பாட்டுக்கு உதவாததாய்க் காணப்படுகிறது. இந்தப்பூச்சியைக் கலைக்கிறதற்காகக் கமக்காரர் மேளம்தட்டுவார்கள் அல்லது நெருப்பெரித்து புகைகாட்டுவார்கள், ஆனல் இச்செய்கைகளினுல் அந்தப் பூச்சியைக் கலைத்தல் முடியாது, ஆகிலும் அவைகளை வயல்களினின்று சொற்பகாலத்துக்குத் துரத்தக்கூடியதாயிருக்கும்.

பின்னுற் சொல்லப்பட்டிருக்கும் முறைகளின்படி கமக்காரர் நடப்பார்களானுல் இந்தப்பூச்சியினுல் நெல்லுக்குண்டாகும் நஷ்டத்தை அதிகமாய்க் குறைக்கலாம், ஆனல் இந்தப்பூச்சி எவ்விடமிருந்துவயலுக்குள் வருகிறதென்றதையும் அது அப்படிச் சீவிக்கிறதென்றதையும் கமக்காரர் அறியவேண்டும். கதிருக்குள்ளே நெல்லு பால்பிடிக்கும் காலம்தொடக்கம் அந்தநெல்லு முற்றிக் காயும்வரைக்கும் இந்தப்பூச்சி நெல்வயல்களில் தோற்றும்காலத்தை அறிந்தவர்களாயிருந்தாலும் நெ

ஜக்கதிக சேதம் உண்டானபின்தான் கமக்காரர் அதைக்கவனிக்கிறார்கள்.

**இந்தப்பூச்சிசீவிக்கும்விதம்:**—இப்பூச்சிகள் வருஷம்முழுதும் சிறுவிளையாய் வயல்களுக்குச் கிட்டினமான இடங்களில் சீவிக்கின்றன. செய்கைபண்ணாத நிலங்களில் காட்டுஓரங்களில் வளரும் காட்டுப்புல்லிலும், வித்துகளிலும், செல்வயலின் அருகுகளிலும், வரம்புகளிலுமுள்ள புல்லிலும் வழக்கமாய் இப்பூச்சிகள் சீவிக்கின்றன. இந்தச் சாப்பாடு இந்தப்பூச்சிகள் கொஞ்சமாய் பெருகுகிறதற்கு போதுமானதாயிருக்கிறது, ஆனால் அவை ஏராளமாய்ப் பெருகுகிறதற்கு போதுமான சாப்பாடல்ல.

வயல்களில் நெற்கதிர் வருங்காலத்தில் தங்களுக்கு அங்கே ஏராளமான உணவுண்டு என்று அறிந்து தாங்களிருக்கும் புல்லுகளைவிட்டு வயல்களுக்குள்பறந்து நெற்பயிர்களில் போய் இப்பூச்சிகள் குடியேறுகின்றன.

நெல்லுத்தழைகளின்மேல் அந்தப் பெண்பூச்சிகள் சிறகுருமைகொண்ட விதைகள்போன்ற முட்டைகள் இடுகின்றன. (1-ம் படத்தைப்பார்) பத்துநாட்களுக்குள் இம்முட்டைகளிலிருந்து சிறு பச்சைநிறமுள்ள பூச்சிகள் வெளிவருகின்றன. (3-ம் படத்தைப்பார்) இந்தப்பூச்சிகள் பகலில் குடாயிருக்கும்பொழுது நெற்பயிரின் அடியில் மறைந்திருப்பதால் கமக்காரர் அவைகளைக் காண்கிறதில்லை. மற்றநேரங்களில் சாப்பிட்டுக்கொண்டேயிருக்கின்றன. அவைகளின் கூர்மையான மெல்லிய சொண்டுகளினால் நெற்பயிரின் அடியையும், இளம்நெல்லையும் குத்தி சாரத்தை உறிஞ்சுகிறது. (9-ம் படத்தைப் பார்) இப்படியே முதிர்ந்த பூச்சிகளும் செய்கின்றன. இப்படியே ஏராளமான பூச்சிகள் பயிர்களையும் நெற்கதிர்களையும் குத்தி உறிஞ்சுவதினால் நெல்லுச்சேதப்பட்டு, தாய்க்கும் அழிந்துவிடுகிறது. இந்த இளம் பூச்சிகள் உணவைத்தின்று சீக்கிரம் வளருகிறது மூன்று கிழமைகளுள் இந்த இளம்பூச்சிகளின் செட்டைகள் வளர்ந்தவுடன் உடம்பும் வளர்ந்து அங்குமிங்கும் பறந்து திரிந்து தங்கள் இனத்தைப் பெருகச் செய்கின்றன.

**இப்பூச்சிகளை அழிக்கும் விதம்:**—இப்பூச்சிகள் ஏராளமாய் வந்துபயிர்களை அழிக்காமலும் அவைகள் பெருக்காமலுமிருக்க கமக்காரன் தடைகள்செய்யவேண்டும். அவைகள் சிலகளாய் வந்தாலுக்கதி கொஞ்சமாக வந்தாலுஞ்சரி அவைகளை அழித்துவிட கமக்காரன் ஆயத்தமாயிருக்கவேண்டும். ஏனென்றால் ஒரு மாசத்துக்குள்ளாக அவைகள் முட்டையிட்டுப் பெருகி அவனுடைய நெற்கதிர்களை அழித்துவிடும்.

வயல்களைச் சுற்றியிருக்கும் காட்டுப்புற்களை வெட்டிச் சுத்தஞ்செய்தால் இப்பூச்சிகள் சிலகளாய் வந்து நெல்லைச்சேதம்பண்ணுதபடி தடங்கல் செய்யலாம்.

காட்டுப்புற்களை வெட்டிச் சுத்தம்பண்ணுவதினால் காட்டுப்புல்லின் விதைகள் பெருகமாட்டாது அப்போது பூச்சிகளுக்கு உணவுகுறைந்து அவைகளின் இனம் பெருக்கவும் மாட்டாது, வயல்களுக்குள் அதிகம் பூச்சிகள் வரவும் மாட்டாது.

இப்பூச்சிகள் வயல்களுக்குள் வந்தவுடன் அவைகள் வந்து பயிரில் இறங்கினவுடன் பிடித்துக் கொன்றுவிடவேண்டும்.

இப்பூச்சிகளை வலைகளினால் சேர்த்தியாய்ப்பிடிக்கலாம். ஒரு சிறு பொடியன் பாவிக்கக்கூடிய சிறுவலையினால் அல்லது இரண்டு மனிதர் பாவிக்கக்கூடிய ஓர் பெரிய வலையினால் பூச்சிகளைப்பிடிக்கலாம். ஒவ்வொரு காட்டிலும் 6 சிறு வலைகளும் 2, 3 பெருவலைகளும் அல்லது 12 சிறு வலைகளும் இருக்கவேண்டும்.

வலைகளை நெற்பயிர்களின்மேல் வீசிபூச்சிகளைப் பிடிக்கவேண்டும். பூச்சிகள் வலைக்குள் அகப்பட்டவுடன் வலைகளின் வாய்ப்புறங்களை மூடி, மண்ணெண்ணையுடன் கலந்த தண்ணீரில் அவ்வலைகளை அமிழ்த்துவதினாலும், அல்லது வலைகளைக் கையினால் சேர்த்துப்பிடித்து நசுக்கிவிடுவதினாலும் பூச்சிகளைக் கொன்றுவிடலாம். தொடக்கத்தில் பூச்சிகள் ஏராளமாய வயலுக்குள் வருவதால் வலைகளை அதிகமாய் நாள்முழுதும் வீசவேண்டும். பூச்சிகள் அற்றுப்போகும்வரைக்கும் ஒவ்வொருநாளும் வலைகளைவீசிக்கொண்டேவரவேண்டும்.

இந்தப் பெருவாரிநோயை நீக்குகிறதற்கும் நெற்கதிர்களுக்கு வேறுசேதம் சொல்லப்பட்டபூச்சிகளினால் வராதபடி தடைபண்ணுதற்கும் செய்யவேண்டிய கருமம் பூச்சிகளை வலைகளால் பிடித்து அவைகளைக்கொல்லுதலே.

இப்பூச்சிகளைக் கமக்காரர் இன்னுமொருவிதமாய் இல்லாமற்பண்ணுகிறார்கள். அது எப்படியென்றால்,— ஒரு கயிற்றை மண்ணெண்ணெயில் அல்லது வேறு எண்ணைகளில் நனைத்து நெற்பயிர்களுக்குமேல் பயிர்களில் படத்தக்கதாக அக்கயிற்றைப்போட்டு இழுப்பார்கள் இப்படி அநேகநாட்களாக ஒவ்வொருநாளும் அடிக்கடி அந்தக்கயிற்றைப்போட்டு இழுத்தால் அதிலிருக்கும் எண்ணெயின் மணம் இல்லாமற்போகும் வரையும் பயிர்களுக்கு பாரதூரமான நஷ்டத்தை இப்பூச்சிகள் செய்யமாட்டாது, ஏனென்றால் எண்ணெயின் மணத்தினால் பூச்சிகள் பறந்துவிடுகிறது. அல்லது நிலத்தில்விழுந்துவிடுகிறது.

இப்படி எண்ணெய் மணத்தினால் உண்டாகும பயம் பூச்சிகள் பயிர்களை கெடுக்கச்சேதம்பண்ணுவதில் இடைக்கிடை சேதத்தைத் தடைபண்ணுதலேதவிர அப்பூச்சிகளைக் கொல்லுகிறதில்லை.

இளம்பூச்சிகளின் தேகம் மென்மையாயிருப்பதால் எண்ணெய் இந்த இளம்பூச்சிகளைக் கொல்லுகிறது. இல்லாவிடில் அவைகள் நிலத்தின்மேல் வீழ்ந்துவிடுகின்றன. ஆனால் முற்றுப்முற்றிவளர்ந்து வண்டுபோன்றபூச்சிகள் பறந்துவிடுகிறது வலைகள் இல்லாவிட்டால் அல்லது பூச்சிகள் முதல்முதல் வயலில் தோற்றின உடன் எண்ணெயில்தோய்த்த கயிற்றை பயிர்கள் மேல்போட்டு இழுப்பது பிரயோசனமானகாரியம். ஆனால் இப்படிக் கலைக்கப்பட்ட பூச்சி வேறுவயல்களுக்குப்பறக்கச்செய்தலே எண்ணெய் விசேஷமாய்ச் செய்யுங்குணம்.

நெற் பயிர் கதிர்கொடுக்கும் காலத்தில் வருஷத்தின் எக்காலத்திலும் ... ம் புல்லுகளை வெட்டிச் சுத்தஞ்செய்வதற்குக் கமக்காரர் உதவிசெய்யவேண்டும் வெட்டியபுல்லை ஆடுமாடுகளுக்குத் தின்னக்கொடுக்கலாம் இல்லாவிட்டால் நெருப்பிலிட்டுச் சுட்டுவிடலாம். இப்படியே புல்லை நல்லாயும் ஒழுங்காயும் வெட்டி சுத்தஞ்செய்துவந்தால் நெற்பயிரைச் சேதம் செய்தற்கு அதிகபூச்சிகள் இருக்கமாட்டாது. இதன்பின் வயல்களுக்கு வரும்பூச்சிகள் நெல்லைக் குத்தி உறிஞ்சுமுன் சிறுவலைவீசிப் பிடித்து அவைகளைப்பிடித்துக் கொன்றுவிடலாம்.

இத்தருமபத்தியில் பிள்ளைகள் உதவிசெய்யப்படுகிறால அவர்கள் சிக்கிரத்தில் பூச்சிகளின் சிறுமுட்டைகளைப் பயிர்களில் கண்டு எடுத்துசேர்த்து அவைகளை அழித்துவிடுவார்கள். அப்படியே சிறுவலைகளைப் பாவிக்கும் விதத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ளுவார்கள்.

நெற்கதிர் வருமுன் கொல்லப்படும் ஒவ்வொரு பூச்சியினால் வரும் ஆதாயம் சாப்பாட்டுக்கேற்றதான ஒருகொத்து நெல்லுக்குச்சமமாயிருக்கும் ஏனென்றால் ஒருபூச்சி தன்காலத்தில் அவ்வளவு நெல்விளைவை அழிக்கக்கூடும்.

இப்பூச்சி நெல்லின் பாரதூரமான பெருவாரி நோயிருப்பதோடு இளம்புழுவாயிருக்கும் காட்களில் நெல்லுக்கதிருக்குச் சேதம்செய்யும் வேறு புழுக்களுமுண்டு. இவைகள் வண்ணாத்திப்பூச்சியோடொத்த பருமமுடையவைகள். இவைகளின்பெயர், "குருக்கத்தி" அல்லது "கொடாவெல்லை" இவைகள் நெற்பயிர்களின் இதழ்களைத் தின்னுகிறதுமல்லாமல் பயிரின் அடியைத்துளைத்து அவைகளை உக்கப்பண்ணுகிறதுமல்லாமல நெல்விதைகளை வெண்மையாய் மாற்றிக் காயம்பண்ணுகிறது.

இந்தக் குருகுத்திப்பூச்சிகள் நெற்பயிர் வளராமலிருக்கும்போது காட்டில் புல்லிற்சீவிக்கிறது. இப்புல்லுகளை வெட்டிவிட்டால் குருக்குத்திப்பூச்சியும் மற்றப்பூச்சியும் மெத்தக் குறைந்துவிடும். நெற்பயிரின் அடியை துளைக்கும் குருக்குத்திப்பூச்சி, நெல்லுவெட்டுப்போகம் முடிந்தால் நெற்பயிரின் அடிக்கட்டையிலிருக்கும் தளிர்களுக்குள் தங்கிவிடுகிறது. ஆனபடியால் அந்த அடிக்கட்டைகளுக்குக் கமக்காரன் நெருப்பிட்டுச் சுட்டுவிடல் மிகப் பிரதானகருமம். இதன்பின் இன்னும் தப்பியிருக்கும் கட்டைகளை உழும்பொழுது நிலத்துள் மறைந்துவிடவேண்டும்.

இக்கருமம் போகம்வெட்டி முடிந்தவுடன் செய்யப்படல்வேண்டும். இதை ஒழுங்காய்ச்செய்து வந்தால் கட்டைத் தளிர்களிலிருக்கும் குருக்குத்திப்புழுவைக் குறைக்கிறதுமாத்திரமல்ல அந்தப் பயிர்க்கட்டைகள் நிலத்துள் அழுங்கிவிட்டால் அடுத்த போகத்துக்கு அவை நிலத்துக்கு நல்ல பசளையாய் மாறிவிடும்.

குருக்குத்தியால் அல்ல மற்றப்பூச்சியால் நெற்பயிர் சேதம்பண்ணப்படாமல் நல்ல நெற்போகம் கமக்காரன் செய்யவேண்டுமானால் அப்படி செய்வதற்கேற்ற சாதாரணமானபிரமாணங்களுண்டு

(1) காலத்துக்குக்காலம் நெல்வயல்களுக்கடுத்த நிலங்களிலுள்ள புல்லுகளையும் செடிகளையும் வெட்டித் துப்பரவாய் வைத்தல்வேண்டும்.

(2) விதைநெல்லுப் பாத்திகளைக் கவனமாய் பார்வையிட்டு அவைகளிலுண்டான களைகளையும் நோயுள்ள நெற்பயிர்களையும் பிடுங்கிச் சுட்டெரித்து மிச்சமான நல்ல பயிர்களைப்பிடுங்கி நாற்றாய் வயல்களில் நாட்டவேண்டும்.

(3) திரும்ப குருக்குத்தி பிடித்திருக்கும் பயிர்களையும் நோயுள்ள பயிர்களையும் பிடுங்கிச் சுட்டெரிக்கவேண்டும். நாற்றுகள் நட்டபின் இககருமம் காலத்துக்குக்காலம், அதாவது பயிர் கதிர் தள்ளும்வரையும் செய்யப்படல்வேண்டும்.

(4) போகம் முடிந்தவுடன் எஞ்சிநின்ற பயிர்க்கட்டைகளை சுட்டெரித்தும், அதின்பின் இன்னுமிருக்கும் கட்டைகளை உழுது புரட்டி மண்ணுக்குள் தாட்கவும்வேண்டும்.

இந்த நியமான பிரமாணங்களைப் பிரயாசமாயும் புத்தியாயும் வேலைசெய்யும் கமத்தொழிலாளர் கைக்கொண்டு ஒழுங்காய் நடத்திவந்தால் நெற்பயிரை நாசம்பண்ணும் புழுக்கள் பூச்சிகளினது அதிக நஷ்டமடையாமல் தப்பிக்கொள்வார்கள். அப்போது தங்களுக்கும்தங்கள் குடும்பத்தினருக்கும் அதிக நெல்லை வெட்டி எடுக்கக்கூடியதாயிருக்கும் அத்துடன் நெல்லும் மலிந்துவிடும்.

இவ்வியாசம் கமச்செங்கைத் தலைவரால் நமக்கனுப்பப்பட்டது. அத்துடன் அனுப்பப்பட்ட 9 படங்களையும் காட்டக் கூடியவசதியில்லை. தேவையானோர் போதனியிலுள்ள அத்தலைவருக்கு 5 சதம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். ச. போ. ப

## விவாகம்.

கமது நண்பரும் பேருபகாரியுமான உடுவில் மெஸ. செல்லப்பா உபதேசியாரின் இரண்டாம் புத்திரனும் தொடுவாய்ப்பகுதியில் மாவய்நாட்டின் பென்றோங் தோட்டப்பகுதியில் உத்தியோகமாயிருப்பவருமான மெஸ.தோமஸ்யோசுவாவுக்கும் ஏழாலையில் அவரின் மாதாவின் பந்துசனருள் ஒருவரான மெஸ். மு. ஆறுமுகத்தின் சிரேஷ்ட புத்திரியான மிஸ்.சின்னம்மாவுக்கும் இந்தமாதம் 11-ந் திகதி ஏழாலைத்தேவாலயத்தில் கனம் இளையதம்பிப் போதகரவர்களால் சடங்கு நிறைவேற்றப்பட்டது. உபதேசியாரவீட்டில் அமைதலாயும் மணவாளிவீட்டில் கட்டுவக்கொட்டுமுழக்கு மிருதங்கம் விசிவுஞற் முதலியவாச்சிய கோட்டங்களுடன் சிறப்பான கொண்டாட்டங்களும்நடைபெற்றன. இப்புதியகுடும்பத்தை தேவன் ஆசீர்வதித்துப் பல்லாண்டு சுகசேமத்துடனே காப்பாராக.

அத்திருமணம் பாடியகீர்த்தனங்கள் வருமாறு:—

கடவுள் வணக்கம்.

விருத்தம்.

திருமலியும்புவிமுதற் பல்லண்டகோடி
திகழவருளளித்திடுநற் றேவேசுனைக்
குருமணியேயும்பர்தொழுங் கோவேதொண்டர்
குணமணியாக் கொண்டபார பரமேயாதி
யொருமுதலேயுனதருமைக் கருணைவெள்ள
முகந்துசொரிந்திடுவாயே யுண்மைமிக்க
மருமணியாகியதோமஸ் துரைமன்றுனும்
மாதுசின்னம்மாவுகன்றாய் வாழத்தானே.

(வாவாகுகாமுருகா என்றமெட்டு)

இராகம் பைரவி. | தாளம் ஆதி

பல்லவி.

தந்தானபிரா—இந்த
தருணந்தனில் மிகுசம்ப்ரமுடனே
மணமதுநிறைவுற—தந்தானபிரா

அநுபல்லவி.

தந்தானமிய யெந்தாயேகனே
சிந்தாமணமறை செவ்வாபரிபூரணனே—தந்

சரணங்கள்.

நித்தியானந்தபரா—சுத்த
நிஷ்கள சத்திய தற்பர நிற்குண வற்புதா நின்மல
நித்தியானந்தபரா
கொத்தார் பூங்குழற்கோதைசின்னம்மையைக்
குணமணிதோமஸ்துரை மாமணமது கொண்
டிடமகிழ்வாய்—தந்

மங்கள காண்தரித்தே—மிக
மகிழ்வொடுதிருவிழியிலொழுகிட்
மனதினிலுளைவழிபட—மங்கலநாண்தரித்தே
சங்கைநிறைந்த தோமாஸ்துரைதாசற்கும்
பங்கயில் சின்னம்மையெனும் மங்கைதனக்குந்த
யவாய்—தந்

புத்திரபாக்கியமும்—நல்ல
பொருளாலுநு போகமுமுன்
னருளாலுநசீவியமும்—புத்திரபாக்கியமும்
மெய்த்திருஞானமு மேதினிமீதுபெற்
றுத்தமராயிப்புவிமீதோங்கிவளர்ந்திடமகிழவாய். த

ஆசிரிய விருத்தம்.

உலகமதிலுயர்விஞேடு மிளிர்ழுதவிபத்தி
னுத்தரதிசைபரந்தே
ஒதுபுகழொடுநிலவு கல்வியாழ்பாணமீ
துற்றிலகுருமுடுவைகரித்
குலவுபூவியமா பனில்வந்தசெலலப்ப
பிள்ளைகொண்டிடுதவத்தாற்
குவலயமதிக்க வந்தவதரித்திட்டவன்
குணமெனுங்குன்றேதினுன்
அலகிலளியுடையனரு மறைவழியிலொழுகுபவ
னறிவிற்சிறந்தநிபுணன்
ஆங்கிலத்தமிழினுட னிதாமலாயதலை
அன்புடனகத்தமைத்தோன்
மலேய (Malay) மெனுமரியபுவிமீதுபென்ரோங்
கதனில் மன்னுசுப்பிரின்ரெண்டராய்
மகிமையிலேடிப்பொழுது மிலகுபவனிறைவனடி
மறவாதுசிந்திப்பவன்

பின்னமில்லாதவழி யிற்தேடுநிதியுள்ளோன்
பேசுநாகரீகமுடையோன்
பெட்புநிறைநடுநீதியுடைய தோமஸ்துரைப்
பிள்ளையென்னும்பூபதி
கன்னல்பூசஞ்செந்நெல் கதலிதிகழேழாலை
சுருதமேழிக்கொடியின்ன
காசினியிலகற்றலைமையுற்ற முதலித்தம்பி
கவினுறுமுகநாதன்
மன்னுபுத்திரிகளுட்பன்னு முதலம்மையா
மங்கையர்சிரோரத்தினம்
மதியைநிகர்வதனிபொறை தயவுமுதலரியகுணம்
மருவுமங்களமுடையவள்
தண்ணளியிருக்கநற் புண்யவதிகலையமுது
தானருந்தியகன்மணி
தங்கநிகர்யேக்கப்பின் னம்மைக்குமங்கிலிய
தாரணஞ்செய்தனனரோ.

பல்லவி.

மங்கிலியம் சூட்டினனே
மனதினிலிறையவ னிணையடி
மதியொடுதொழு தகமகிழ் வுடன்—மங்

அநுபல்லவி

மண்ணுடரும் விண்ணுடரும்
மங்களமழை பொழியவே
தண்ணார்கவிப்புலவோர் தமாசிகூறிடவே
தாரணிபுக ழாரணர்மறை பாடிடமிகு பூரணமதாய்—மங்.

மாதா பிதா வாழியவர்
மனதி னில்மகிழ் வடையவே க்கே
போதாரும் பூங்குழலாள் பூவைசின்னம்மாவினு
பூதலத்துறை மாதவத்தினர்
பூமழைசொரிக் தாசிகலிட—மங்

மங்கல மா முரசொலிக்க
மாலில் கவரி வீசவே வே
தங்குபுகழ்த் தேசிகர்தன் சந்தையுடன்வாழ்த்திட
தவமிருக்த நல்லவைமலிந்திடு மெகருமங்களமது
புகன்றிட—மங்.

சபைவணக்கம்

திருப்புகழ்.

சிர்கமகிழ்வுடனேயெமைவிரும்பி
வந்தவரியசபையீரடியர்துதி
தந்துபணிதல்புரிந்தோம்தகுதிநிறை-பெரியோரே
செம்மைமனதையுடையீர்கருணையாக
நன்மைபுரியுநடையீர்கருதுமுல
குண்மைபுகலுமறைதயிர்கலையுணரு—மதிவோரே
முந்துமகிமையுடையீர் மிகுர்தகன
முந்துபெருமையுடையீருவகையொடு
பந்தரமருமழகிர்பணிமதியை—யிவையோரே
முன்னுபுகழிறுடனே மணமகர்கள்
பன்னிவளர்கவெனவேமங்களமொழி
பன்னுபரமனடியிருமக்குத்துதி—பகர்ந்தோமே

வாழி விருத்தம்.

சீர்பூத்தபரமனருள் மறையும்வாழி
திகழ்குரவர்தேசிகர்கள் சிறந்துவாழி
பார்பூத்தபாவலர்கள் பாவும்வாழி
பலம்பூத்தஜோட்ஜ மகாராசன்வாழி
கார்பூத்தவிலங்கையெனுங் கவினிவாழி
கவின்பூத்தவன்னல்தோமஸ் துரையாமன்னன்
தார்பூத்தகுழலாள் சின்னம்மையோடு
தாரணியில்நீடூழி வாழி! வாழி!!

## கடிதம்.

கோலச்சிலாங்கூர்

'போதினி' யான் உன் மூலமாய்த் தெரிவிக்கவேண்டிய சம்பவங்கள் அநேகம் இருந்தும் என் தற்கால கஷ்டாகஷ்டங்களால் விட்டேன்தன். என்றாலும் தெரிவிக்க வேண்டியவைகளைத் தெரிவிதாந்தானே தீரவேண்டும். உன்னை வைத்து ஆதரித்துவரும் தா தா வின் அரிய மைந்தராகியவர் இத்தேசம் எண்டிசையும் உலாவி வருகிறார். அவர் உன்னை இதிலிருந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் ஓர் பெரிய உருவமாக்கும் நோக்கத்துடன் சந்தா நேயர்களைச் சேர்த்துவருகிறார். "மன்னற்கு தம் தேசம்அல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச் சென்றஇடம் எல்லாம் சிறப்பு" என்னும் மூதுரைவாக்கின்படி மேற்படி மகானுக்கு நடைபெற்றுவருகின்றது. இதனிற்க, நின் மூலமாகவும், "இந்துசாதன"ப்பத்திரிகைவாயிலாகவும் தலைமைக்காரர் நியமன திருத்தமென்றும், மருடவசனம் புனைப்பெற்று வெளிவந்த சம்பவங்களைப்பார்த்தோம். இத்தேசத்தில் இருக்கும் யாழ்ப்பாண வாசிகளில் சிலராகிய நாங்களும் சில சொல்லவேண்டியிருப்பதால் சொல்லுகின்றேம்; அது யாதெனில் சாதனத்தில் பேசியவைகளில் சம்பளம் ஐம்பது நூறு கொடுக்கவேணும் என்றசொல்லை பார்த்தளவில் மாங்காய்க்கு புளிப்பையேற்றிய வாறுகும்போல் இருக்குது. எனெனில் சம்பளத்துடன் கைக்கூலி என்னும் கனஞ்சியத்தையும்கையாடிவர இது ஏதுவாகும். இதைவிட மேற்படி சாதனத்தில் ஓர் இடத்தில் சொல்லி இருக்குமாப்போல் கிராமச்சங்கத் தலைவரின்கீழ் இரண்டுவருஷத்துக்கு ஒருமுறை புதிது புதிதாக தலைமைக்காரரை ஏற்படுத்துவதே மிகப்பெரிய உசிதமாகும். இதையே நம்மரிய ஸ்ரீமான்களாகிய யாழ்ப்பாணச் சங்கத்தார்களும் ஒத்துக் கொள்வார்களென நம்பி எழுதத்துணிந்தேம். இதைவிட ஷெ சங்கத்தாரைக் கண்டித்தெழுத காலங்கள்வாயில்லை ஆனதால் ஷெ யாழ்ப்பாணச் சங்கத்தார் எம்மில் குறை கூருவண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஸ்ரீமான் சன்மார்க்கபோதினிப் பத்திராதிப ரெழுதியவைகளும் நற்பொருள் பொதியப்பட்டவைகளேயாம். இக்கடிதம் பிரசுரம்பண்ணப்பட்ட பிரதியில் ஒன்றை மகாசனம்தங்கிய தற்கால எங்கள் சனப்பிரதிநிதிக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

இவ்வூரில் யாழ்ப்பாணிகளால் தெரியப்பட்ட
பழையகடிதன்
அ. செ. அ.

கிராமச்சங்கத்தலைவரே சனங்களால் மற்றப்படவும் தெரியப்படவும் வேண்டியவரென்பதும் அப்படித் தெரியப்படுவோர் கண்டதெல்லாவர்திற்கும் கைக்கூலி வாங்கத்துணியார் என்பதும் குடி, கூத்து, கடுஞ்சினம்முதலிய துர்க்கிரியைகளை விலகிநடப்பார் என்பதும் நமதெண்ணம். ச. போ. ப.


**LONDON WATCH & CO.**

TIRUVADI.

(Via) TANJORE DT.

**இது ஓர் நல்ல சமயம் தக்க லாபம்**

கீழேகண்டகெடியாரங்கள் ஒருமாதந்திற்குள். இவ்வளவு குறைந்தவிலைக்குக்கிடைக்கும்.



வியாபாரத்தோரணை என்று ஏமாந்துவிடகேண்டாம். வி. பி. யில் அனுப்பமுடியாது. முன்பணமாக மணியாடர் அனுப்பி விட்டுச் சாமான்களை ரிஜிஸ்டர் பார்சல் மூலமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டியது. சாமான்களில் திருப்தியில்லாவிட்டால் உடனே ரூபாய்வாபாஸ் செய்யப்படும்.

புதிபெஷ்டு பேட்டண்டு பாகெட் வீவாட்ச் 5 வருஷம் உத்திரவாதமும் உறுதியான சாமான்களால் வெகு அழகாய் செய்யப்பட்டது.

1-ம் நம்பர் பெஸடுபேட்டன்டு பாகெட் வீவாட்ச 4—8—0

2-ம் நம். நூதன லேடீஸ் ரேடியம் ரையருள்ள ரவுன்டு ரிஸ்டு கெடியாரம் சிலண்டர் தோற்பட்டையுடன் 5—8—0

3-ம் நம். ஷெ மாதிரி 8 மூலைகளுள்ள ரேடியம் ரிஸ்டு கெடியாரம் தோல்பட்டையுடன் 5-8-

4-ம் நம். அசல்சொக்கவெள்ளி லேடிஸ் ரிஸடு கெடியாரம் இருபக்கமும் வளையம் இல்லாததும் 6 வருஷம் உத்திரவாதமுள்ளது 10—00

ஆர்டர் செய்வோர் பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டு எழுதவும்:

மானேஜர் லண்டன் வாட்சு அன்கோ.

திருவாதி தஞ்சாவூர் ஜில்லா.

'VENUS' என்னும்

## ஆனந்த சுக தயிலம்.

தப்பாது வாதைலயத்தீர்த்து ஆரோக்கிய மேகிக்கும்.

இது வாதம், உருக்கு, பிடிப்பு முதலிய தசை நரம்புச் சுளுக்குகளையும் கரப்பன், புண், சொறி, சுடப்பு ஆகியவும் கிருமிகளாலாகிய கோய்களையும் சிறு வெட்டுக்காயங்களையும் தப்பாது மாற்றக் கைகண்ட தயிலம்.

விலையோ சொற்பம், குணமளிக்கும் சக்தியோ சொல்லற்கரிது.

ஒருமுறைபாவித்தால்ஒருபோதும்குறைகூறுவீர். இது வீண்பறையறைதலல்ல.

விலை செப்பு ஒன்று சதம் 75

Obtainable from
S. Bastianpillai
"RiverBank"
Lindula
Ceylon

**Testimonial**

"அருமருந்தான திருமருந்துத் தயிலம் அம்புவியோர் ஆசிக்கும் ஆனந்த சுக தயிலம்" இத்தயிலமானது எவ்வித நரம்புச் சுளுக்கு, நோவு, வாதம், கைகால்பிடிப்பு, தலையிடி ஆதியாம் நோய்களை ஆதவனைக்கண்ட அரும்பனிபோலப் பூசியவுடன் புகையாய்மாற்றிவிடும். கைகண்டமருந்து என்னனுபவத்தில்யான் இதை அருக்கும் அதிகம் களிப்புடனும் ஆனந்தத்துடனும்அறிவிக்கிறேன்.


பி. மரியநாகம்
போஸ்மாஸ்டர்

## இரவில் மணிபார்க்கும் 8 மூலை ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம்.

இரவில் மணி பார்ப்பதற்குஇக்கெடியாரத்திற்கு விளக்குமுதலிய வேறு வெளிச்சம் வேண்டியதில்லை. இதில் ரேடியம் என்னும் நூதன வஸ்துவை நெம்பர்களிலும் முள்களிலும்சேர்த்திருப்பதால் இரவில் மணி நன்றாய்த் தெரியும். இருட்டு எவ்வளவு கருக்கலாய் இருக்குமோ அவ்வளவிறகும்



மூலைஇல்லாத ரவுண்டுரிஸ்லெட் ரேடியம் கெடியாரம்
1-க்கு 6-80



8 மூலை நிக்கல ரிஸ்லெட் ரேடியம் கெடியாரம்
1-க்கு ரூபாய் 7 8-0

எண்கள் நன்றாய்த்தெரியும் இது சரியான டைம் காட்டக்கூடியது. இதை ப்பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவோர்கள் வெகு அழகாய் இருக்கும் உயர்ந்த தோல் பட்டையுடன் அனுப்பப்படும்.

கைவசம் கொஞ்சம்தான் இருக்கிறது. உடனே தருவித்துக்கொள்ளுங்கள்.

மானேஜர் தைரியலக்ஷ்மி அண்டு கம்பேனி.
போஸ்ட் பாக்ஸ் 625நெ. . மதராஸ், (A. T.)

## கோடைகாலத்திற்கு!!!

என்னதேவையோ அதை தேடிக்கொள்ள வேண்டும்.

## சர்வதேள் விஷசஞ்சீவி.

(ரிஜிஸ்டர்ட்)

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள் இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது ஏனென்றால் ஓர் மனிதன் இரவில் 12 மணிக்கு நித்திரையில்

1920 வருஷத்திய



100 ரூபாய்

விஷத்தீண்டிவிட்டால் அமமனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லததிலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை 1 பாக்கெட் அணா 0-8-0
விலை 12 பாக்கெட் ரூபா 5-0-0

வி. எ. எஸ். பாணி.
நெ 3, இருளப்பன் தெருவு, மதராஸ்.

## பி சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத அவுஷதங்கள்.

33 சித்தமகரத்துவஜம்—இது மகரத்துவஜத்தைவிடச் சிறந்தஔஷதம். இதனால் தீவிரவிர்த்தியென்றுமில்லை, சர்வசுரங்கள் காசம் இருமல் க்ஷயம் அக்கினிமாந்தம் காலரு சீதபேதி இரத்தபேதி சகலவாய்வு இன்னும் எல்லாவியாதிகளுந்தீரும். இம்மருந்து உபயோகித்தவருக்கு ஆயுசு நூறுவருஷமானாலும் பூரணபுருஷத்தன்மை குறையாமலிருக்குமென்பதிற்சந்தேகமில்லை தோலா ஒன்றுக்கு ரூபா 80. ஏழுவேளைக்குள்ளமருது ரூபா 3, விபி செலவு அணு 5பிரத்தியேகம்

34 காலருஎன்னுமவாந்திபேதிக்கு மருந்து—இக்கொடியநோய்க்கு இதைகைகண்டஔஷதம் டப்பா ஒன்றுக்கு ரூபா 1.வி பி செலவு 1 முதல்டப்பாக்கள்வரையிலனுப்பஅணு5பிரத்தியேகம்

35 லக்ஷிமீவிலாச தைலம்—மிகவும் வாசனையுள்ள தையிலம். தலைமயிர் கண் புருவம், மீசை, தாடி மெத்த செழிப்பாகவும், கருப்பாகவும், நெருக்கமாகவும் வளர்ச்சியும். இதன் இன்பமான சுகந்தம் இத்தைலத்தை உபயோகிக்கிறவர்களை சுற்றிக்கொண்டே கெடுநேரம் வீசும், மூளைக்கொதிப்பை போக்கி, சித்தபிரமை தலைமயக்கம், புத்திமந்தம், நித்திரையில்லாமை முதலியவைகளை போக்கும். விலை சீசா 1-க்கு அணு 12—ஒன்று அல்லது 2 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவுகள் அணு 5 பிரத்தியேகம்

36 மலபத்தநிவாரணி—மலசலக்கட்டு அக்கினிமாந்தம் வாய்வு குடல்புரட்டல் மூலச்சூடு காந்தல் இளைப்பு மூலம் சொரியாமை புளித்தஏப்பம்தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம்உதயமாகும் டப்பா ஒன்றுக்கு விலை அணு 10, வி பி செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்

37, மஹாகோரோசனை மாத்திரை—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம் இளைப்பு, வலிமயக்கம், தெற்குந்திக்கணைசன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம் ஊறுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பன் பால்மாந்தம்முதலியஎல்லாமாந்தங்களும், கருங்கிரந்தி செங்கிரந்தி மலசலக்கட்டு முதலியதுகளும், விஷசுரம், முறைசுரம்முதலான பலவித சுரங்களும் அடியோடுநீங்கும் சீசா 1-க்கு விலைஅணு 10, 1 முதல் 6 சீசாக்கள்வரையில், வி, பி, செலவு அணு பிரத்தியேகம்.

38விஷஹரநிலா—எப்பேர்க்கொத்த சிலந்தியும் தேள்தியின் இரண்டு பொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சந்தடவி நன்றாகத்தேய்க்கவேண்டும் இடுப்புநோய் கழுத்துநோய் பக்கவலை கைகால்பிடிப்பு முதலியவும் இன்னும்தேகத்தில் காணும்மற்றுமுள்ள சகலவலிகளுக்கும் இம்மருந்தில்கொஞ்சமெடுத்துநோயுள்ளவிடத்தில் நன்றாய்த்தேய்க்கச்சுகமாகும், தேள்நட்டுவக்காலிபூரான் இதுகள்கொட்டினஅல்லது கடித்த விடத்தில்இம்மருந்தைத்தடவிநன்றாகத் தேய்த்தால் சௌக்கியமாகும், சீசாஒன்றுக்கு அணுஎட்டு விபி செலவுஒன்று முதல் ஆறுசீசாக்கள்வரையில் அணுஐந்து பிரத்தியேகம்

அதிஉன்னத வாசனைத்திரவியங்கள் முதலானவைகளின் விலைவிபா ஜாபிதா.

உயர்ந்தகோரோசனை தோலாஒன்றுக்கு ரூபா எட்டுஉயர்ந்தபச்சைசக்கற்பூரம் தோலா ஒன்றுக்குரூபா இரண்டு உயர்ந்த குங்குமப்பூ தோலா ஒன்றுக்கு ரூபா2. விபி செலவுபிரத்தியேகம்.

உசிதமான அத்தர்தினிசுகள்—ரோசாப்பூ மல்லிகைப்பூஜாதிப்பூ மகிழம்பூ வினாமிச்சம்வேர் மரிக்கொழுந்துதாழம்பூசுவாக்முதலியபுஷபங்களின்முதற்றரமான அத்தர்வகை தோலா 1-க்கு ரூபா 1 அணு 8, வி பி செலவு பிரத்தியேகம்

இந்தியன்பெட்டல்வட்டு—அதிமனோரம்மியமானசுகந்தகலவைபொட்டலம் உடுப்பு பெட்டிகளில்வைத்திருந்தால்உடைகளுக்கு மிகவும் உன்னதமானசுவாசனைஏற்றுவது மன்னியில் வண்டுமுதலிய பூச்சிகள் அணுகாமற்காக்கும்இதன்இன்பமானசுகந்தம் நெடுநாள்நிற்கும் பொட்டலம் ஒன்றுக்கு விலை அணு4, 1 முதல் 12 பொட்டலங்கள்வரையிலனுப்ப வி பி செலவு அணு 5 பிரத்தியேகம்

நாக்குப்பூச்சிமருந்து—குடலிலுள்ளஎல்லாவித கிருமிகளையும்வெளியாக்கி நாக்குப்பூச்சிகளாலுண்டாகும் எல்லாவிதபாதைகளையும்நிவாரணஞ்செய்யும் தேகஆரோக்கியத்தைத்தரும்நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால் அடிவயிற்றில்கனப்புசியின்மைஅபரிதமான பசியைப்போல்தோற்றல்சாப்பிட்டபின் வயிற்றுநோவுவயிற்றுப்போக்கு வாய்நாற்றம் வாந்தி வெருட்டல் சரம்தலைவலி மூக்கிலும் ஆசனத்திலும்அரிப்பு வாயில் உமிழ்நீர் ஊறல் நாக்குஇழுத்துக்கொள்ளல் சிலசமயம் மலச்சிக்கல்சிலசமயம் மலக்கழிச்சல் முதலிய பற்பல நோய்கள்நாக்குப் பூச்சிகளால் உண்டாவதை இம்மருந்துமுற்றிலும் குணமாக்கும். விலை சீசாஒன்றுக்கு அணு பத்து, ஒன்றுமுதல் பன்னிரண்டு சீசாவரையிலனுப்ப வி பி செலவு அணு ஐந்து பிரத்தியேகம்.

அரகசா—இது மற்றொருவித திவ்யமான சுகந்தகலவை இதைத்தனியாகவாவதுசந்தனத்துடனாவதுஉபயோகிக்கலாம் தேகத்தில் பூசிக்கொள்ளலாம் உடுப்புகளுக்குப்போடலாம் அதிஉன்னதமான வாசனை இதின்திவ்யமானபரிமளத்தைச் சுகித்தவர்களால் மிகவும்புகழப்படுகிறது ஒருதடவைபூசினபிறகு பிரதிதினம் ஸ்நானஞ்செய்தாலும் மூன்றுநாள்பரியந்தம் இதன்இன்பமானபரிமழம் தேகத்தில்தங்கிநிற்கும் விலைடப்பாஒன்றுக்கு அணு 6,1முதல் 12 டப்பாக்கள்வரையிலனுப்ப வி பி முதலியசெலவுகள் அணு 5 பிரத்தியேகம்.

தஞ்சாவூர் மசாலா அல்லது இளவரசரின் வாஷப்பவுடர் ஒருபாக்கட் விலை அணு 8.

உபயோகிக்கும்விதம்:—சாதாரணமாக இருவர்கள்சாப்பாட்டுக்கு ஒன்று அல்லதுஇரண்டு சிட்டிகை மசாலா போதுமானது: மரக்கறி அல்லது மில்ட்டெரி சாப்பாட்டு குழம்பு கறி துவையல் முதலிய இன்னும்பற்பல சமையல் பதார்த்தங்களில் உபயோகிக்கலாம். எதனுடன் சேர்த்தாலும் அதின்ருசியும் வாசனையும் மனதுக்கு இன்பத்தையேதரும் அவர்கள் ருசிக்குதக்கபடி இந்த மசாலாவைக் கூட்டியும்குறைத்தும் உபயோகிக்கலாம் இந்த மசாலா உபயோகிக்கும் பொழுதெல்லாம் கொஞ்சம் கொத்தமல்லி விரையையும் தேங்காயையும் தனிமையாகவாவது அல்லது நெய் அல்லது எண்ணெயைவிட்டு வறுத்தாவது அன்செய்து சேர்த்துக்கொள்வது நலம் இந்த மசாலாவை ஆகாரத்துடன் உபயோகித்துவருவதால் சீரணம் அக்கினிமாந்தம் தீரும்

பன்னீர்—இப்பன்னீர் அரைஅவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது, இச்சிறுசீசாவிலுள்ள பன்னீரை 3 பெரியசீசா வென்னீருடன்கலந்தால் முதல்தரமான 3 சீசா பன்னீராகும் மேன்மையான பன்னீர்விலை சீசா 1-க்கு அணு 8 வி பி செலவு 1 முதல் 3 சீசாக்கள்வரையிலனுப்ப 5 அணு பிரத்தியேகம்

உடுப்புகளுக்கு விலாசம்போடும் அழியாதமை அல்லது இங்கி—பருத்தி கம்பளி பட்டு முதலியவஸ்திரங்களில் எவ்வளவு தடவை வண்ணாங்களைத் துவைத்தாலும் அல்லது வெளுத்தாலும் விலாசம் எக்காலத்திலும் அழியாது இம்மையினால் விலாசம்போட்டால் உடுப்புத் திருட்டுப்போகாமலும் மாற்றப்படாமலும் காக்கலாம். விலை சீசா ஒன்றுக்கு அணு எட்டு, வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்

என்து விலாசம்
பி. சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

MY ADDRESS
P. SUBBRAOY
Ayurvedic Pharmy
Sri Venkedasa
Perumal Koil
Sannayhy
Tanjore

# கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

## நாணயமான ஜவுளிகள் கிடைக்கும்.

இந்தியா மகமதியர்களுக்கு தேவையான மாதிரி ஜவுளிகள் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு சகாயமாய் கிடைக்கும்.

எல்லாரும் வி. பி. யில் வாங்கலாம்.

இந்தியா, சிலோன். பர்மா, சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா, மலாய்நாடு, ஆபிரிக்கா. டிரான்ஸ்வால், நெட்டால், பிஜிதீவு, முதலிய தேசங்களுக்கு ஜவுளி தினுசுகள் அனுப்பும்.

தனலெக்ஷிமி சுதேசி ஜவுளி மாளிகை.

அம்மன் சன்னதி தெருவு.

தந்திவிலாசம். Murahri Madura. } மதுரை. தென்இந்தியா


Printed and published by S. Tambimuttu puvalhy Gnanapragasa Yanthira office, Atchuvaly, Jaffna.